என்பவருக்கும் வீரசேனபதி என்பவருக்கும் தகராறு இருந்தது. அந்த நேரத்தில்தான் இந்த சம்பவம் நிகழ்ந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : நான் கோர்ட் விவகாரங்களில் தலையிடவில்லை. கோர்ட்டில் ஜாமீன் வேண்டுமா என்று போலீசாரைக் கேட்கிறார்கள். ஜாமீனில் விடக்கூடாது என்று ஆட்சேபனை செய்தால் விடுவதில்லை. ஆனால் 90 சதவீதம் கேஸ்களில் விட்டு விடுவதில்லை. அத்தகைய ஆட்சேபனை போலீசாரிடமிருந்து தஞ்சை ஜில்லாவில் வருவதில்லை என்பதால்தான். காலையில் ஜாமீனில் போய் மாலையில் கலகத்துக்கு வருகிறார்கள். அதைப்பற்றித் தான் நான் குறிப்பிடுகிறேன் என்ற விளக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

Trespass into a Trust land

* 78 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether 400 Left Communists entered into the lands of a charitable organisation at Namasivayapuram of Nagappatinam taluk and created chaos; and

(*b*) if so, the action taken thereon by the Government?

தர்ம ஸ்தாபன நிலத்தில் நுழைந்து குழப்பம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) நாகபட்டிணம் தாலுகா நமசிவாயபுரத்தில் ஒரு தர்ம ஸ்தாபன நிலத்தில் அண்மையில் 400 இடது சாரி கம்யூனிஸ்டுகள் நுழைந்து குழப்பம் விளைவித்தனரா ?

(இ) ஆமெனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Interest on loans given by the Government

* 79 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Government will reduce the rate of interest for the loans granted by the Tamil Nadu Government and for the loans disbursed to the public through Co-operative Department as the Reserve Bank has reduced the rate of interest by one per cent; and

(*b*) if so, the details thereof?

[1st March 1969

அரசு வழங்கும் கடன்களுக்கு வட்டி வீதம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்.—

(அ) ரிசர்வ் பாங்க் வட்டி விகிதத்தை ஒரு சதம் குறைத்த தால் தமிழக அரசு வழங்கும் கடன்களுக்கும், கூட்டுறவு இலாகா மூலம் பொது மக்கள் பெறும் கடன்களுக்கும தமிழக அரசு வட்டி விகிதத்தை குறைக்குமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) (i) In the case of loans sanctioned by Government the rate of interest charged will not be reduced as a result of the reduction in the Bank rate.

(ii) In the case of loans given to the public through Co-operative Department, a portion of the reduction in rate, is being passed on to the public.

(b) In the case of loans sanctioned by the Co-operatibe Central Banks, instructions have been issued that the rate charged to the ultimate borrower may be reduced by 0.6 per cent and that charged to primary credit societies by the Central Bank by 0.4 per cent. The margin retained by primaries has been increased with a view to making them financially stronger.

Sales tax on mill yarn

* 80 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether exemption from the levy of Sales Tax has been given to the mill yarn alone exported to the other States from Tamil Nadu;

(b) the shortfall in income for the Government of Tamil Nadu as a result of this; and

(c) the loss of income that will be sustained by the Government in a year if such exemption is given to entire mill yarn?

ஆலை நூல் மீது விற்பனை வரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் —

(அ) தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி யாகும் மில் நூலுக்கு மட்டும் விற்பனை வரி ரத்து செய்யப் பட்டதா ?